18.03.2026
O.S.No. 78/2023
PW1– வசந்தா – க/பெ. குட்டிச்சாமி
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.03.2026

முதல் விசாரணை தொடர்ச்சி :

1. குட்டிச்சாமியின் இறப்பு சான்று இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. குட்டிச்சாமியின் முதல் மனைவி மாரியம்மாளின் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. வாதியின் குடும்ப அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. குட்டிச்சாமியின் மகள் கலாவின் இறப்பு சான்று இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. குட்டிச்சாமிக்கும், வாதிக்கும் நடந்த திருமணத்தை பதிவு செய்ததற்கான விவாஹ ஒப்பந்த பத்திரம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. குட்டிச்சாமியின் தாயார் காளியம்மாளின் இறப்பு சான்று இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. குட்டிச்சாமியின் தகப்பனார் ராஜாவின் இறப்பு சான்று இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 3ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று கேட்டு மனு செய்ததில் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கான சான்று இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. மாரியம்மாள், குட்டிச்சாமியிடம் ஜீவனாம்சம் கேட்டு தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு M.C.No.2/1993 ன் உத்தரவு சான்று நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. வாதிக்கு VAO வழங்கிய இருப்பிட சான்று அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. குட்டிச்சாமி வாதியை Nominee யாக காண்பித்து தொடங்கிய வங்கிக்கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. வாதியை மனைவியாக காண்பித்து குட்டிச்சாமி தொடங்கிய Staff group Meniclaim policy certificate அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14. வாதியின் கணவர் குட்டிச்சாமி நவம்பர் 1992 ல் முதல் மனைவி மாரியம்மாள் மீது செங்கோட்டை காவல்நிலையத்தில் அளித்த புகார் மனு கைநகல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்குவிசாரணை (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

1. எனக்கும், சுப்பையாவுக்கும் திருமணம் நடைபெற்று, திருமணத்தின் பயனாக மீனா என்ற குந்தை உள்ளது என்றால் சரியல்ல, சுப்பையா எனது தாய்மாமா, மீனா எனது அக்கா மகள். எனக்கும், குட்டிச்சாமிக்கும் மாரியம்மாள் உயிருடன் இருக்கும்போது பழக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. முறைப்படி தான் திருமணம் செய்தார். எனக்கும், குட்டிச்சாமிக்கும் திருமணம் நடைபெற்று 27 ஆண்டுகள் இருக்கும்.

2. வா.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ள வழக்கில் எனது கணவரின் முதல்மனைவி எனக்கும், குட்டிச்சாமிக்கும் தொடர்பு உள்ளதால் என்னை பராமரிக்க தவறிவிட்டார் என கூறி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பொய் வழக்கு.

3. எனக்கும், குட்டிச்சாமிக்கும் பதிவுத்துறை அலுவலகத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. அதில் சாட்சி கையொப்பம் செல்லப்பா என்பவர் செய்தார்.

4. வா.சா.ஆ.6 ஆவணம் எதற்காக பிறப்பிக்கப்பட்டது என்றால் முதல்மனைவியுடன் குட்டிச்சாமிக்கு சம்பிரதாய ரீதியாக விவாகரத்து ஏற்பட்டபிறகு இந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது.

5. குட்டிச்சாமி இன்சூரன்ஸ் நிறுவனத்தில் பியூனாக வேலை செய்தார் என்றால் சரிதான்.

6. குட்டிச்சாமிக்கு முதல் திருமணத்தின் பயனாக 3ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதி மற்றும் இறந்துபோன கலா ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். ஆனால் குடும்பஅட்டையில் இவர்கள் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. எனக்கும், குட்டிச்சாமிக்கும் சட்டப்படி திருமணாகவில்லை, அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai